# இலங்கைத் தொலைதொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு

மொழிபெயர்ப்பாளர் பதவிக்கு ஆட்சேர்த்தல் - தமிழ் (வெளிவாரி)

**இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் (TRCSL) மேற்குறித்த பதவி வெற்றிடத்தை நிரப்புவதற்கு தகைமைபெற்ற அபேட்சகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

**(1) கடமை விபரம்**

- அறிக்கைகளை/கடிதங்களை/ஆவணங்களை ஆங்கிலத்தில் இருந்து சிங்களத்திற்கு அல்லது தமிழுக்கு அத்துடன் மறுதலையாகவும் மொழிபெயர்த்தல்
- அறிக்கைகள்/கடிதங்களை/ஆவணங்களை தமிழில் இருந்து சிங்களத்திற்கு அத்துடன் மறுதலையாகவும் மொழிபெயர்த்தல்
- வெளியிலிருந்து சேவை பெறும் மொழிபெயர்ப்புப் பணிகளை ஒருங்கிணைத்தல்
- வரைவுகளையும் ஆவணங்களையும் ஒப்புநோக்குதல் மற்றும் மீளாய்தல்

**(2) வேண்ட்டப்படும் குறைந்தபட்ச கல்வி.ஃ.தொழில்சார் தகைமைகள் மற்றும் அனுபவம்**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பட்டப்படிப்பின் ஒரு பாடமாகப் சிங்களம்/தமிழ்/ஆங்கிலம் பாடத்தைக் கொண்ட இளமானிப் பட்டம்.

அத்துடன்

சத்தியப்பிரமாணம் பெற்ற மொழிபெயர்ப்பாளராக தகைமைக்குப் பிந்திய 03 வருட அனுபவம்.

**(3) ஆட்சேர்ப்பு நடைமுறை**

ஆட்சேரப்பானது எழுத்து மூல போட்டிப் பரீட்சையைத் தொடர்ந்து கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை மற்றும் செயன்முறைப்பரீட்சை என்பவற்றின் பெறுபேறுகளின் அடிப்படையில் திறமை ஒழுங்கில் மேற்கொள்ளப்படும்.

**(4) சம்பளம்:-** TRC 4.1 - ரூ. 70,380 (10x1173) -(10x1564)-(10x1955)-(10x2346) – 140,760

**(5) வயது** : விண்ணப்ப முடிவுத் திகதியன்று 18-45 வருடங்கள்

**(6) விண்ணப்பிக்கும் முறை**

1. விண்ணப்பப் படிவத்தை இலங்கைத் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ வலைத்தளமான www.trc.gov.lk இலிருந்து பதிவிறக்கம் செய்யலாம்.
2. தொடர்புடைய படிவத்தை பயன்படுத்தாது அனுப்பப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
3. விண்ணப்பங்கள் தெளிவாகவும் வாசிக்கத்தக்கதாகவும் இருக்க வேண்டும் மற்றும் தேவைப்பாடுகளுடன் பொருந்தாத விண்ணப்பங்கள் கருத்தில் கொள்ளப்படாது
4. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் கல்வி/தொழில்சார் தகைமைகளின் சான்றிதழ்களின் பிரதிகளும் பணி அனுபவ விவரங்களும் இணைத்து அனுப்பப்பட வேண்டும்.
5. அனைத்து விண்ணப்பங்களும் கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகளின் சான்றிதழ்களின் பிரதிகளுடன் சேர்த்து "பணணிப்பாளர் நாயகம் - இலங்கைத் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு, இல. 276, எல்விடிகல மாவத்தை, கொழும்பு 08" என்ற முகவரிக்கு **2025.03.05** அன்று அல்லது அதற்கு முன்னர் பதிவு அஞ்சல் மூலம் அனுப்பப்பட வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "தமிழ் மொழிபெயர்ப்பாளர் பதவிக்கான விண்ணப்பம்" என்று குறிப்பிட வேண்டும்.
6. விண்ணப்பத்தின் ஸ்கேன் செய்யப்பட்ட பிரதியை கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகளின் சான்றிதழ்களின் பிரதிகளுடன் careers@trc.gov.lk என்ற மின்னஞ்சலுக்கு அனுப்ப வேண்டும். மின்னஞ்சலின் தலைப்பு "Recruitment to the post of Translator( External) – 2025" எனக் குறிப்பிட வேண்டும்.
7. அரசாங்க நிறுவனங்களில் பணிபுரியும் விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை நிறுவனத் தலைவர் ஊடாக சமர்ப்பிக்க வேண்டும்.
8. விண்ணப்பங்கள் **2025.03.05** அன்று அல்லது அதற்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

**(7) பொதுவான நிபந்தனைகள்**

**பொதுவான நிபந்தனைகள்**

1. ஒவ்வொரு விண்ணப்பதாரரும் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டுமென்பதுடன் பதவியின் கடமைகளை சிறப்பாக நிறைவேற்றுவதற்கும், நாட்டின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கும் உடல் ரீதியாகவும் உளரீதியாகவும் பொருத்தமானவராக இருக்க வேண்டும்.
2. விண்ணப்ப முடிவுத் திகதியன்று வேண்டப்பட்ட தகைமைகளைக் கொண்டிராத விண்ணப்பதாரர்கள் பரிசீலனையிற் கொள்ளப்பட மாட்டார்.
3. எவ்விதத்திலும் செல்வாக்குத் தேடுவது தகைமையிழக்கச்செய்யும்.
4. நிரப்ப வேண்டிய பதவிகளின் எண்ணிக்கையை தீர்மானிப்பதற்கு அல்லது பிற்போடு:வதற்கு/இரத்துச்செய்வதற்கு இலங்கைத் தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு உரிமையைக் கொண்டுள்ளது.
5. இலங்கைத் தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவானது ஒழுங்குமுறைப்படுத்தும் அதிகாரசபையொன்றாகும், அதில் தொழிலுக்காக ஆட்சேர்க்கப்படுகின்ற எவரேனும் ஆள், இலங்கைத் தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டுப்பாட்டுக்கு கீழுள்ள நிறுவனமொன்றில் உள்ள பதவியொன்றில் அல்லது பதவியொன்றுக்கு அவரது துணைவரின் அல்லது எவரேனும் குடும்ப உறுப்பினரின் நியமனத்திற்கு அல்லது தொழிலுக்கு நேரடியாக அல்லது நேரடியின்றி ஊக்குவிக்க, முன்னேற்ற அல்லது ஆதரவு தேடலாகாது.

பணிப்பாளர் நாயகம்
இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குமுறைப்படுத்தும் ஆணைக்குழு
இலக்கம்: 276
எல்விட்டிகல மாவத்தை
கொழும்பு 08